1989 மே 5]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, பெண் கைதிகள் எவ்வளவு என்ற விவரம் இப்போது இல்லை. ஆனால் ஏற்கெனவே விடுதலை செய்யப்பட்ட 120 பேரில் ஒரே ஒரு பெண்தான் இருந்தார். அதைப் பொறுத்தவரையில் பாராட்ட வேண்டியதுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 210 முதல் 213 முடிய, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

பஸ் பயணிகளுக்கு காப்பீட்டு முறை.

214—(*வினா எண். 1748) திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் துறை பஸ்களிலும், அரசு பஸ்களிலும் பயணம் செய்யும் பயணிகள் விபத்தில் இறக்க நேரிட்டால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க ''காப்பீட்டு'' முறை கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே,

(அ) இத்தகைய காப்பீட்டு முறை கொண்டுவருவது அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அதிக அளவு இஸ்லாமியர்கள் வாழும் இடங்களில் தனி நியாய விலைக் கடைகள்.

215—(*வினா எண். 3501) டாக்டர் க.காஞ்சனா: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிக அளவு இஸ்லாமியர்கள் வாழும் இடங்களில் தனி நியாய விலைக் கடைகள் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?